


மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சென்னை தலைமை செயலகத்திலிருந்து ரூ.87.75 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள குளச்சல் மீன்பிடி துறைமுகத்தினை இன்று (21.09.2016) காணொலி காட்சியின் மூலம் திறந்து வைத்தார்கள். அதனை தொடர்ந்து, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ.விஜயகுமார் எம்.பி. அவர்கள் முன்னிலையில், குளச்சல் மீன்பிடி துறைமுகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், குத்து விளக்கேற்றி வைத்து, மீனவர்களுக்கு இனிப்புகளை வழங்கினார். தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவுத்தலைவர் திரு. சேவியர் மனோகரன் உடனுள்ளார்.

செ.வெ.எண்: 655/2016 நாள்: 21.09.2016

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சென்னை தலைமை செயலகத்திலிருந்து ரூ.87.75 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள குளச்சல் மீன்பிடி துறைமுகம் மற்றும் ரூ.73.52 கோடி செலவில் விரிவாக்கப்பட்ட சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகத்தினையும் இன்று (21.09.2016) காணொலி காட்சியின் மூலம் திறந்து வைத்தார்கள்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சென்னை தலைமை செயலகத்திலிருந்து ரூ.87.75 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள குளச்சல் மீன்பிடி துறைமுகம் மற்றும் ரூ.73.52 கோடி செலவில் விரிவாக்கப்பட்ட சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகத்தினையும் இன்று (21.09.2016) காணொலி காட்சியின் மூலம் திறந்து வைத்தார்கள்.

அதனை தொடர்ந்து, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ.விஜயகுமார் எம்.பி. அவர்கள் முன்னிலையில், குளச்சல் மீன்பிடி துறைமுகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், குத்து விளக்கேற்றி வைத்து, மீனவர்களுக்கு இனிப்புகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவுத்தலைவர் திரு. சேவியர் மனோகரன், தமிழ்நாடு சிறுபான்மை ஆணைய உறுப்பினர் திரு. ஏ.ஜஸ்டின் செல்வராஜ், துணை இயக்குநர் (மீன்வளத்துறை) திரு. லாமக் ஜெயக்குமார், உதவி இயக்குநர்கள் (மீன்வளத்துறை) திரு. ரூபர்ட்ஜோதி, திரு. நாபிராஜ், உதவி பொறியாளர்கள் திரு. ஜாகீர்உசைன், திரு. அருள்போஸ்கோ, அரசு வழக்கறிஞர் திரு. ஞானசேகரன், திரு. கனகராஜன், பங்குதந்தை ஹெட்வின், குமரி மாவட்ட விசைபடகு நல சங்கத்தின் தலைவர் திரு. பரணபஸ், செயலாளர் திரு. பிராங்கிளின் மற்றும் மீனவ சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

**குளச்சல் மீன்பிடி துறைமுகம் திட்டத்தின் குறிப்பு:-**

கடலோர மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கு மீன்பிடி தொழிலே முக்கியமானது. கன்னியாகுமரி மாவட்டத்தின் கடற்கரை நீளம் 72 கி.மீட்டர். 42 மீன்பிடி தொழில் செய்யும் கிராமங்கள் உள்ளன. இந்த 72 கி.மீ கடற்கரையில் 45 இடங்களில் மீன்படி சாதனங்கள் நிறுத்தி வைக்கப்படும் தளங்களாக உள்ளன. இதில் குளச்சல் மிக முக்கியமான பகுதியாகும். குளச்சலில் 502 இயந்திர படகுகளும், 1848 பைபர் வள்ளங்களும், 1079 கட்டுமர வள்ளங்களும் உள்ளன. மீனவர்கள் தொன்றுதொட்டு அவர்களது பழமையான முறைப்படி கடலில் மீன்கள் பிடித்து கரையில் வியாபாரம் செய்து வந்தனர். பாதுகாப்பான படகுகள் அணையும் தளம் இல்லாததாலும், சுகாதார முறைப்படி, மீன்களை கையாள ஏதுவாக அடிப்படை வசதிகள் இல்லாத காரணத்தாலும் விற்பனையில் குறைந்த வருமானமே கிடைத்து வந்தது.

எனவே மீனவர்களின் நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று, மீன்பிழடி தொழிலின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு, பின்வருமாறு வசதிகளைக் கொண்ட மீன்பிடி துறைமுகம் அமைக்கப்பட்டுள்ளது.

இதில் மேற்கு அலைதடுப்பு சுவர் 540 மீட்டர் நீளமும், கடல் மட்டத்திலிருந்டது 6.50 மீ உயரமும், மேல்மட்ட அகலம் 8.00 மீ உள்ளதால் அமைக்கப்பட்டுள்ளது. கிழக்கு அலைதடுப்பு சுவர் 230 மீட்டர் நீளமும், கடல் மட்டத்திலிருந்து 6.50 மீட்டர் உயரமும், மேல்மட்ட அகலம் 8.00 மீட்டர் உள்ளதாக அமைக்கப்பட்டுள்ளது. படகு அணையும் தளம் 242.00 மீட்டர் நீளத்திலும், கடல்மட்ட அளவிலிருந்து 2.00 மீட்டர் உயரத்தில் கட்டப்பட்டுள்ளது. மீன் ஏலக்கூடம் 75.30 x 15.40 மீட்டரும், பணிமனை 10.20 x 10.20 மீட்டரும், நிர்வாக அலுவலக கட்டிடம் 18.30 x 9.70 மீட்டரும், உணவகம் 19 மீட்டர் x 6.70 மீட்டரும், ஓய்வு அறை 17.15 x 8 மீட்டரும், வலை பின்னும் கூடம் 25.40 x 10.40 மீட்டரும், கழிவறை 10.23 x 8.08 மீட்டரும், ரேடியோ தகவல் நிலையம் 9.66 x 9.66 மீட்டரும், மின் உற்பத்தி அறை, பாதுகாப்பாளர் அறை, எடைமேடையும், அதற்கான அலுவலகமும், சுற்றுச்சுவர் 400 மீட்டர் நீளத்திலும், உள்புற சிமெண்ட் சாலைகள் 650 மீட்டர் நீளத்திலும், வாகன நிறுத்தும் இடம் 120 x 30.00 மீட்டர் நீளத்திலும், மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி கொள்ளளவு 6 ஆயிரம் லிட்டர், உயர்மட்ட கோபுர விளக்கு 6 ஆயிரம் வாட்ஸ் ஜெனரேட்டர் 100KVA மற்றும் மின்விளக்குகள் உள்பட படகுகள் நிறுத்தும் பகுதியில் 4.00 மீட்டர் ஆழத்தில் ஆழப்படுத்தப்பட்டு வருகிறது.

**<u>துறைமுக பரப்பளவு:-</u>**

துறைமுக கரைப்பகுதி 360 x 90 = 32499 ச.மீ 3.24 (ஜெனரேட்டர்)

துறைமுக நீர்ப்பகுதி 380 x 175 = 66500 ச.மீ 6.65 (ஜெனரேட்டர்)

துறைமுகத்தின் மொத்த பரப்பளவு 98900 ச.மீட்டர் - 10.00 (ஜெனரேட்டர்)

**<u>துறைமுகத்தால் பயன்பாடுகள்:-</u>**

இந்த புதிய மீன்பிடித்துறைமுகத்தின் மூலம் 12,500 மீனவ மக்கள் பயன்பெறுகின்றனர். ஆண்டு முழுவதும் பாதுகாப்பான மீன்பிடி தொழில் செய்ய வசதி செய்யப்பட்டுள்ளது. உபயோகிக்கப்படாத மீன்வள ஆதார அமைப்புகளை மீனவர்கள் உபயோகித்து பயன்பெற ஊக்குவிக்கப்படுகிறது. சுற்றுசூழல் பாதுகாத்து கடல் மீன்வளத்தை பயன்படுத்தவும், சுகாதாரமான முறையில் மீன்கள் இறக்கம் செய்து வியாபாரம் செய்திட, அடிப்படை வசதிகள் செய்திடவும், மீனவர்களின் வாழ்வாதாரம் உயர்த்துவதற்கு வழிமுறைகள் செய்யப்பட்டுள்ளன.

**<u>சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகம் விரிவாக்கம் குறிப்பு:-</u>**

சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகமானது 1984-ஆம் வருடம் ஆரம்பிக்கப்பட்டு, கிழக்கு அலை தடுப்பு சுவர் 901 மீட்டர் மேற்கு அலை தடுப்பு சுவர் 285 மீட்டர், படகு அணையும் தளம் 640 மீட்டர் நீளம் கொண்டதாகவும், 8.87 ஹெக்டேர் நிலப்பரப்பும், 22.9 ஹெக்டேர் நீர்பரப்பும் கொண்டதாகவும் அமைக்கப்பட்டது. அதன் பின் சுமார் 30 ஆண்டுகளாக எவ்வித நிதி

ஒதுக்கீடு பெறாமல் சுனாமி நேர பாதிப்புக்கு உட்பட்டும் இருந்தது. அதன் பின்னர் தமிழ்நாடு அரசின் முனைப்பினால் அரசாணை எண் மத்திய அரசு கால்நடை பராமரிப்பது, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை ஆணை எண் 33013-12/2012-குலு (ர்)இ நாள் 18.03.2013-ன்படி, மாநில அரசின் ஆணை எண் 154/ கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை/ நாள் 21.06.2013-ன்படி, ரூ.73.52 கோடி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, கிழக்கு அலை தடுப்பு சுவர் 100 மீட்டர் நீளம் நீட்டிப்பும், 430 மீட்டர் நீளத்தில் புதிய மேற்கு அலை தடுப்பு சுவரும், 200 மீட்டர் நீளத்தில் படகு அனையும் தளமும், 120 மீட்டர் நீளத்தில் இருபுற படகு அனையும் தளம் மேம்படுத்தவும், இவற்றின் மூலம் ஏற்கெனவே உள்ள நீர்பரப்பு 32 ஹெக்டேராக அதிகரிக்கவும், புதிதாக ஏலகூடம், வலை பின்றும்கூடம், மின் இயந்திரகூடம், பாதுகாவலர் அறை, நிர்வாக அலுவலகம், உணவு விடுதி, இயந்திர அறை, மீன் பொருட்கள் சுத்திகரிக்கும் அறை போன்றவை அமைக்க உத்தேசிக்க பட்டு, அனைத்தும் செவ்வனே முடிக்கப்பட்டது. இதன் மூலம் மீனவர்களின் நீண்டநாள் தேவைகள் நிறைவேற்றப்பட்டன. ஆரோக்கியபுரத்திலிருந்து பெரியகாடு வரை உள்ள 11 கடற்கரை கிராமங்கள் 23 கி.மீ நீளத்திற்கு இதன் மூலம் பயனடைகிறார்கள். அதுமட்டுமல்லாமல் 1000 வள்ளம், 350 விசை படகுகளும் இதன் மூலம் பயனடைகிறார்கள். நேரடி பயனாளிகளாக 6ஈ500 குடும்பங்களும் மறைமுகமாக 18,500 குடும்பங்களும் பயனடைகிறார்கள்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.